*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
🔗 Quarterly 🔍 Peer-Reviewed 🌐 Open Access 🔗 Crossref 🔗 Google Scholar
🔗 SJIF Impact Factor 4.355 🔗 Multidisciplinary 🔗 International
doi : https://doi.org/10.63300/kijts10sp02.2026

**Vol. 10 No. 02, September 2026 (Special Issue) p141-147** | Available online at: www.ngmtamil.in
*Original Research, Paper – Peer Reviewed*

# சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் பண்டைய சடங்குகள்

Ancient rituals known through Sangam literature

**முனைவர் உ நிர்மலா,**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,
ஏவிஎஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) சேலம் -106
மின்னஞ்சல் முகவரி: nirmalakumar75@gmail.com

## Abstract

The Sangam era was defined by the interplay of Akam (the inner world of emotions and love) and Puram (the outer world of public life and valor). Various rituals were intertwined with the daily lives of the people—encompassing love, marriage, worship, warfare, agriculture, death, and hospitality. Information regarding these rituals is widely found in texts such as Tolkappiyam, Akananuru, Purananuru, Natrinai, Kuruntokai, Ainkurunuru, Kalittokai, Patitruppattu, and Pattinappalai. These rituals were not merely religious activities; they were deeply connected to social order, family relationships, beliefs regarding nature, the spirit of valor, and the remembrance of ancestors. People in different regions adopted specific customs suited to their living environments. Deeply integrated into the social fabric, communities adhered to various beliefs and the rituals associated with them. Ritualistic practices accompanied human life from birth to death. Sangam literature serves as a mirror, clearly reflecting the customs and beliefs of that ancient society. Special rituals were performed at various stages of life—from conception in the mother's womb to death—to mark and commemorate these milestones. Thus, a ritual represents a prescribed form of conduct. This research paper examines such rituals through the lens of Sangam literature.

## ஆய்வுச் சுருக்கம்

அகமும் புறமும் சேர்ந்ததே சங்ககாலம். அக்கால மக்களின் காதல், திருமணம், வழிபாடு, போர், வேளாண்மை, இறப்பு, விருந்தோம்பல் போன்ற வாழ்வியல் நிகழ்வுகளோடு பல்வேறு சடங்குகளும் இணைந்திருந்தன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை,

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

ஐங்குறுநூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை முதலிய நூல்களில் சடங்குகள் தொடர்பான செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. இச்சடங்குகள் வெறும் சமயச் செயல்பாடுகளாக அமையாமல், சமூக ஒழுங்கு, குடும்ப உறவு, இயற்கை நம்பிக்கை, வீர உணர்வு, முன்னோர் நினைவு ஆகியவற்றோடும் தொடர்புடையனவாக விளங்கின. உலகில் வாழும் சூழ்நிலைக்கேற்ப ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்கள் சில பழக்க வழக்கங்களைப் பின்பற்றினர். சமூகத்தோடு பின்னிப்பிணைந்துள்ள மக்கள் சமூகத்தில் நம்பிக்கைகளையும் அதனை சார்ந்து சடங்குகளையும் பின்பற்றி வந்தனர். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து செயல்களிலும் சடங்கு முறைகள் காணப்பட்டனர். சங்க இலக்கியங்கள் பண்டைய சமூக பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் வெளிப்படையாக காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது. தாயின் கருவில் உருவானது முதல் இறப்பு வரை ஒவ்வொரு கட்டத்திலும் அதனின் நினைவூட்டுவதற்காக சில சிறப்பு செயல் சடங்குகளைச் செய்கின்றனர். எனவே சடங்கு என்பது நிர்ணயிக்கப்பட்ட நடத்தைகள் வடிவம் ஆகும். இத்தகைய சடங்குகளை சங்க இலக்கியங்கள் வழி ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## ஆய்வு நோக்கம்

நாம் வாழ்க்கையில் அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்ற சடங்குகளைச் சங்க இலக்கியம் மிகத்தெளிவாக வெளிப்படுத்துகினை;றது. அத்தகைய வாழ்வியல் சடங்குகள் அவர்களுடைய அன்றாட வாழ்வியலை உயர்த்தும் செயலையும் செய்கின்றன. எனவே அத்தகைய சடங்கு முறைகளை சங்க இலக்கியங்கள் வழி ஆராய்ந்து விளக்குவதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு அனுகுமுறை

சங்ககால மக்களின் வாழ்வியல் சடங்குகளைச் சங்க இலக்கியங்கள் வழி ஆராய்ந்து எடுத்துரைப்பதால் இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துக்கூறும் முறையில் அராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## திறவுச்சொற்கள்:

சடங்குகள், திருமணம், வழிபாடு, வெறியாட்டு, நடுகல், முன்னோர் வழிபாடு, வேளாண்மை.

## முன்னுரை

சடங்கு என்பது ஒரு சமூகத்தினரால் குறிப்பிட்ட நம்பிக்கையின் அடிப்படையில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஒழுங்கமைந்த செயல்பாடாகும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு சடங்குகள் இடம்பெறுகின்றன. இவை தனிமனிதச் செயல்களாக மட்டுமன்றி, சமூகத்தின் பண்பாடு, நம்பிக்கை, அறவியல், வாழ்க்கை முறை ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. பண்டைய தமிழரின் சடங்குகளை அறிந்துகொள்வதற்கு சங்க இலக்கியங்கள் சிறந்த ஆதாரங்களாக அமைந்துள்ளன. குறிப்பாக அக இலக்கியங்கள் குடும்பம் மற்றும் காதல் சார்ந்த சடங்குகளையும், புற இலக்கியங்கள் போர், வீரர், மன்னர், இறப்பு மற்றும் நடுகல் சார்ந்த

சடங்குகளையும் எடுத்துரைக்கின்றன. இவற்றையெல்லாம் முறையாக ஆராய்ந்து இந்த ஆய்வுக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

**சடங்கு வரையறை :**

மனிதன் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமானால் அதற்கு சடங்குகள் என்று பெயர் .மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்குகள் நிறைந்து காணப்படுகின்றனர் .சடங்கு என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்திலோ அல்லது சமயத்திலோ குறிப்பிட்ட நோக்கங்களுக்காக செய்யப்படும் அடையாளபூர்வமான முறைப்படுத்தப்பட்ட செயல்களில் தொகுப்பு ஆகும்.

சடங்குகளில் மக்கள் தங்களை பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டு செய்வதற்குரிய காரணமாக" கடவுளிடம் உள்ள அச்சமும் முன்னோர் பின்பற்றிய பழக்க வழக்கங்களையும் மீறாமல் நடந்து கொண்டால் தான் வாழ்க்கை சுகமானதாய் கவலையின்றி அமையும் என்ற நம்பிக்கையும் சேர்ந்து அத்தகைய சடங்குகளை விடாமல் செய்துத் தூண்டுகின்றனர் ".என்று தே. ஞானசேகரன் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. மேலும் அவர் இது பற்றி "மனித வாழ்வினை சுற்றி நிலைத்திருக்கும் மர்மமே சடங்குகளின் தோற்றத்திற்கு காரணம் "என்று குறிப்பிடுகின்றார் .மனிதன் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்றும் ஒழுக்கங்கள் மற்றும் நடத்தைகளை சடங்குகள் என்று குறிப்பிடப்படுகின்றனர்.

**சடங்குகள் நோக்கம்:**

சடங்கு பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடும்பம் தழைக்க, நோயின்றி வாழ ,துன்பம் நீங்க இன்பத்தோடு வாழ, இயற்கை வசப்படுத்த, போன்றவைகள் நமக்கு கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் நிறைவேற வேண்டும் என்பதற்காக சடங்குகள் கையாளப்பட்டனர்.

**பிறப்பு சடங்கு:**

குழந்தை பிறந்த நாளை பெரிதும் கொண்டாடுவர். இதனால் குழந்தை பிறந்த நாள் முதலியன குறிக்கும் இக்கால சாதகம் போன்றறொரு வழக்கம் முன்பு இருந்ததோ என்று ஐயுறவு தோன்றலாம்.

மன்னர் தமது பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாடுவதில் இருந்து மக்களிடையே அவ்வழக்கம் தோன்றியது. நன்னன் என்பவன் தனது பிறந்த நாளில் கொண்டாடிய சேரி விழாவை உவமையாக எடுத்துக்காட்டுகிறது மதுரை காட்சி

***'பேரிசை நன்னன் பெரும் பெயர் நன்னாள்***
***சேரி விழாவின் ஆப்பு எழுந்தாங்கு" (மதுரை:618 -619)***

**பூப்புச்சடங்கு :**

மனிதன் வாழ்க்கை வட்டாரசடங்குகளாக காணப்பட்டது. பூப்பு ஒரு பெண் குறிப்பிட்ட வயது வந்ததும் அவர் பக்குவமடைகிறாள். பெண் பூப்படைந்தவுடன் அதை பயத்தோடும் அச்சத்தோடும் தாய் அல்லது சுற்றி உள்ளவர்களிடம் தெரிவிப்பார்கள் அன்று மாலையில் மாமன் வீட்டார் மற்றும்

உறவுக்காரர் ஊரார்கள் போன்றோர் சீர்வரிசையுடன் வந்து பெண்ணுக்கு சடங்குகளை செய்வார்கள். தண்ணீர் ஊற்றி அலங்கரித்தல், குச்சி கட்டுதல் ,பூப்பெய்தி பெண்ணிற்கு உணவு கொடுத்தல் ,சடங்கு சுற்றுதல், கொடி போடுதல் போன்ற சடங்குகளை மேற்கொள்கின்றன.

பெண்கள் பூப்படைந்ததை ஒட்டி செய்யப்பட்ட சடங்குகளைப் பற்றி சங்க இலக்கியங்கள் விரிவான தகவல்கள் இல்லை. மக்கட்பாற் காஞ்சித் துறையில் மட்டும் பெண்ணின் முதல் பூட்டும், அதனை ஒட்டி நிகழ்த்தப்பட்ட சடங்குகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பூப்புச் சடங்குகள் குறித்துப் புறநானூறு ஆசிரியர்,

***'பாரி பரப்பின் பணிச்சுமனை***
***போல் காண்டற் கரியளாகிய மாண்டா***
***பெண்மை நிறைந்த பொலிவொரும் மண்ணிய***
***துகில் வரி கடுப்ப நுங்கி தண்டிணை வரி***
***கடுப்ப நுங்கி தண்டிணை***
***அதில் அரும்பும்புகை சென்றடங்கிய***
***கபில நெடுநகர்க் கமலும் நாற்றமொரு***
***மனைச் செறிந் தன்னை வானுதல்"; (புறநானூறு 337)***

எனச் சுட்டுகிறார்.

## திருமணம்:

ஒரு சமூக சட்ட மற்றும் உறவுமுறை அமைப்பாகும். ஆணும் பெண்ணும் இணைந்து சேர்ந்து இல்லறம் நடத்துவதற்கான ஒரு வாழ்க்கையே திருமணம் ஆகும்.

## திருமணம் சொல்லும் பொருள்:

திருமணம் என்ற சொல்லுக்கு விளக்கம் கூறுகின்ற போது 'திரு' என்பது அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருட்கள் தருகிறது .திருமணம் என்பதற்கு மணம், விவாகம் ,வினை கல்யாணம் மற்றும் இல்லறம் போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இல்லறம் என்பது வீட்டிலிருந்து வாழும் அறநெறி என்பது பொருளாகும். இல்லறமல்லது நல்லறமில்லை.வாழ்வே மக்களை மாக்களின்றும் வேறுபடுத்தி உயர்த்துவதாகும்.

சங்ககாலத்தில் மணமகன் வீட்டார் பெண் வீட்டாரிடம் பெண் கேட்டு திருமணத்தை நல்ல முகூர்த்தம் பார்த்து நிச்சயத்தனர் என்பதை

***'துரைதொன்றும் பரக்குந் தூமணற்***
***சேர்ப்பனை காதலென் யாயஜநனி வெல்லம்***
***எந்தையுங் கொடீஇயர் வேண்டும்***
***அம்பலூரு பவனொரு மொழிமே" (குறுந்4)***

எனக் குறுந்தொகை பாடல் வழி அறியலாம்.

தமிழகத்தில் திருமணம் எனத் தாம் எழுதிய கட்டுரையில் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளையவர்கள் பாணிக் கிரகணம் ஓமம், தீவும் வருதல் சப்தபதிமுதலியன

சங்ககாலத்தில் நிகழ்ந்தன அல்ல. புரோகிதர்கள் மந்திரம் ஓதுதலும் மண வினையில் இல்லை என்றே கூறால் தாலி கட்டும் சடங்கும் காணப்படவில்லை என்று எழுதியுள்ளார்.

### தீயின் வலம் வருதல் :

தீனை வலம் வருதல் என்பது ஒரு பழமையான சடங்கு ஆகும் .கோயில்களில் இறைவனை வழிபடும் போது அவற்றை சுற்றி வருவது வழக்கமாக உள்ளது .இதனை பிரதட்சணம் என்றும் கூறுவார்கள். இது இடமிருந்து வளமாக சுற்றி வருவது இந்தச் செயலை செய்தவன் மூலம் பாவங்கள் நீங்கும் புண்ணியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

சங்க இலக்கியங்களில் திருமணம் நடைமுறை பற்றி செய்திகள் அரிதாகக் காணப்பெறுகின்றனர். அகநானூற்றுப் பாடலில் தீவலம் வருவது சுட்டப் பெறவில்லை .மணமக்கள் மணதின்போது எரி வலம் வருதலை முதற்கண் சிலப்பதிகாரம் குறிப்பிடுவதைக் காணலாம்.

'எரியும் செய்வான் சால மீன் தகையாளைக்
கோவலன் முழுதும் பார்ப்பான் மறை வழிக் காட்டிடத்
தகவல் செய்து கொண்டார்கள் நோன்பென்னை" (சிலப்பதிகாரம் 51-53)

### தை நீராடும்:

தை நீராடல் என்பது இளம் பெண்களால் நிகழ்த்த பெருமை நிகழ்ச்சி .சங்க இலக்கியங்களில் சுட்ட பெரும் பண்டைய தமிழர் தம் பண்பாட்டு தொடர்புடையது மணமகாத பெண்கள் மார்கழி முழுமதி நாள் தொடங்கி தை முழுமதி நாள் வரை விடியற்காலையில் போராடி நோன்பு இருப்பர்.
பெண்பால் பிள்ளைத் தமிழ் இலக்கணத்தைக் கூறுமிடத்தே, பிங்கலந்தை நிகண்டு, சூத்திரம் 1369 இவ்வாறு கூறுகிறது.

***'பேணும் சிறப்பின் பெண் மகவாயின்***
***ஐந்தின் முதலா***
***ஒன்பதின்காறும்ஐங்கணைக் கிழவனை***
***யார்வமொடு நோற்றலும்பனி நீர***
***தோய்தலும் பாவை யாடலும்." (நிகண்டு1369)***

ஐந்து முதல் ஒன்பது வயது வரையிலான பருவத்தில் உள்ள சிறுமியர் பனி நீர் தோய்ந்து, பாவை ஆடி, ஐங்கணைக் கிழவன் எனப்படும் ஐந்து பாணங்களை உடைய காம தேவனுக்கு ஆர்வமோடு நோன்பு நோற்பர் என்பது இதன் பொருள்.

### கைம்மை நோன்பு :

திருமணத்திற்கு முன்பிருந்தே பூச்சூடி வளையலணிந்து நல் உணவு உண்ட மகளிர் கணவரை இழந்த பிறகு அனைத்தையும் துறந்தவராகின்றனர். பஞ்சணையிலோ, நல்ல படுக்கையிலோ படுத்துறங்கிய மகளிர் பாயும் இல்லாது சிறிய கற்கள் நிறைந்த வெறுந்தரையில் படுத்து உறங்கியிருக்கின்றனர். தாளிப்புடன் கூடிய நல்ல கொழுவிய சுவையுடனான அடிசிலைத் தவிர்த்து நறு நெய்யின்றி நீர்ச்சோற்றையும் புளிகூட்டப்பட்ட வேளைக் கீரையினையும் உணவாகக்

கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் அவ்விடத்து உண்டான புல்லரிசியினையே தம் உணவாக உட்கொண்டனர். இதனை குறுந்தொகையில்,

***'நறுநெய் தீண்ட துடையிடைக்கிடந்த***
***கைபிழி பிண்ட வெள்ளெட் சாந்தோடு***
***புளிப்பெய் வேளை வெந்தை***
***வல்சியாகப் பரப்பெய் பள்ளிப் பாயின்று வதியும்"***
***(குறுந்தொகை – பா -87)***

எனச் சுட்டுகின்றனர்.

கைம்மை நோன்பு என்பது கீழ்க்கண்ட ஐந்து நிலைகளில் அமைய காணப்படுகிறது.

1.அணிகலன்களை நீக்குதல்

2.கூந்தல் கொய்தல்

3.பாயின்றி படுத்தல்

4.கட்டுப்படானஉணவு உண்ணுதல்

5.குறிப்பிட்ட தொழில் மேற்கொள்ளுதல்

இவ்வாறாக சடங்குகள் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வடை சடங்குகள் வாழ்வின் அங்கமாகவும் கொண்டனர் என்பதை இலக்கியங்களில் வழி அறிய முடிகிறது.

## வேளாண்மை சார்ந்த சடங்குகள்

சங்ககாலத் தமிழரின் வாழ்க்கையில் வேளாண்மை முக்கியமான இடம் பெற்றிருந்தது. எனவே மழை, நீர், நிலம், விளைச்சல் ஆகியவற்றோடு தொடர்புடைய நம்பிக்கைகளும் சடங்குகளும் இருந்தன. மருத நில வாழ்க்கையில் வயல், நெல், நீர், உழவு ஆகியவை தொடர்ந்து இடம்பெறுகின்றன. புறநானூறு 18-ல்:

***"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (புறம் - 18)***

என்று உணவின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது.உணவு உற்பத்தியின் அடிப்படை நிலமும் நீரும் என்பதால், வேளாண்மை சார்ந்த சடங்குகள் இயற்கையை மதிக்கும் மனப்பான்மையோடு தொடர்புடையதாக இருந்தன.

## முடிவுரை:

மனிதன் நாகரிகம் பெறத் தொடங்கிய பின்னர் பழக்கவழக்கங்களும் சடங்குகளும் மெல்ல மெல்ல நிலைக் கொண்டன. பெரும்பாலான சடங்குகள் சமயம் சார்ந்தே நிகழ்த்தப்படுகின்றன. மனிதன் வாழ்வைச் சுற்றி நிலைத்திருக்கும் மர்மமே சடங்குகளில் தோற்றத்திற்கு காரணம் ஆகும். சங்க கால மக்கள் தங்களின் வாழ்க்கையை தீமைகளில் இருந்து நன்மை நிறைந்ததாக அமைத்துக் கொள்வதற்கு இத்தகைய சடங்கு முறைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதை இந்த ஆய்வின்மூலம் உணர முடிகிறது. குடும்ப உறவை வலுப்படுத்துதல், சமூக ஒற்றுமையை உருவாக்குதல் தெய்வ நம்பிக்கையை நிலைநிறுத்துதல், இயற்கையுடன் மனிதனை இணைத்தல்,வீரர்களின் நினைவைப் பாதுகாத்தல், முன்னோர்களைப் போற்றுதல், சமூக ஒழுங்கை நிலைநிறுத்துதல், மக்களின்

அச்சத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துதல், தலைமுறைதோறும் பண்பாட்டைக் கடத்துதல் ஆகிய் சமூகப்பணிகளை சங்ககாலச் சடங்குகள் செய்துள்ளன என்பதை அறியலாம்

## துணைநூற்ப் பட்டியல்:


**[1.]** **மாங்குடி மருதனார்**, *மதுரைக்காஞ்சி*, நச்சினார்க்கினியர் உரை, உ.வே. சாமிநாதையர் பதிப்பாசிரியர், கேசரி அச்சுக்கூடம், சென்னை.

**[2.]** **புறநானூறு**, ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை உரை, *புறநானூறு மூலமும் உரையும்*, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**[3.]** *குறுந்தொகை*, புலியூர்க் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3, ஶ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை – 600 014.

**[4.]** **இளங்கோவடிகள்**, *சிலப்பதிகாரம்*, புலியூர்க் கேசிகன் உரை, கௌரா பதிப்பகம்/சாரதா பதிப்பகம், சென்னை.

**[5.]** நிகண்டு சூத்திரம் - **சாரதா பதிப்பகம் -** ஜி-4, சாந்தி அடுக்ககம், -3, ஶ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, -ராயப்பேட்டை, சென்னை – **600 014**.


KALANJIYAM